සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ව්‍යාපාර අධ්‍යයනය I வணிகக் கல்வி I Business Studies I	32 T I	පැය දෙකයි இரண்டு மணித்தியாலம் *Two hours*

அறிவுறுத்தல்கள் :
- ※ எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
- ※ மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணை** தெளிவாக எழுதுக.
- ※ **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ※ **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ※ ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் : ....

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

வினாத்தாள் I இற்கானது	
வினா இல	புள்ளிகள்
01 - 30	
31 - 50	
மொத்தம்	

	ஒப்பம்	குறியீட்டெண்
1 ஆம் பரீட்சகர்		
2 ஆம் பரீட்சகர்		
மேலதிக பிரதம பரீட்சகர்		
எண்கணிதப் பரிசோதகர்		
பிரதம பரீட்சகர்		

1. மனிதர்களால் கட்டாயமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டிய உடல், உள ரீதியான நிலையினை இனங்காட்டுவது
(1) விருப்பங்கள் (2) பொருட்கள் (3) தேவைகள்
(4) கேள்வி (5) பெறுமதிகள் (......)

2. 'உற்பத்தித் தன்மையின்' அடிப்படையில் வணிகத்துறையின் வகைப்படுத்தலாக அமைவது
(1) தனியுடைமை (2) பொதுத் துறை (3) அங்கீகார வணிகம்
(4) முதனிலை வணிகம் (5) கைத்தொழில் வணிகம் (......)

3. அல்பா கம்பனியானது கிரய வினைத்திறனை விருத்திசெய்வதற்கான முறைகளைப் பரீட்சிப்பதன் ஊடாக மூலப்பொருட்களை நாளாந்தம் கொள்வனவு செய்வதன் மூலம் உயர்தரத்திலான பொருட்களைத் தயாரிக்கின்றது. மேலும், கம்பனியானது புதிய தொழில்நுட்ப தந்திரோபாயங்களினூடாக புத்தாக்க வாய்ப்புக்களின் மீது தொடர்ச்சியாக கவனம் செலுத்துகிறது.
மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் உள்ளடங்கியுள்ள ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கைகளின் எண்ணிக்கையாவது
(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5 (......)

4. பண்டமொன்றின் தனித்துவத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு நுகர்வோர் ஒருவர் அப்பண்டத்துக்கு முன்னுரிமை அளிப்பாராயின் அது
(1) வசதிப் பண்டம் ஆகும். (2) நாடப்பெறாப் பண்டம் ஆகும்.
(3) கடைப் பண்டம் ஆகும். (4) தனிப்பட்ட பண்டம் ஆகும்.
(5) விசேட பண்டம் ஆகும். (......)

5. பின்வரும் அட்டவணையானது சில சர்வதேச அமைப்புகளையும் அவற்றின் அங்கத்துவ நாடுகள் சிலவற்றையும் எடுத்துக் காட்டுகிறது.

சர்வதேச அமைப்புகள்	அங்கத்துவ நாடுகள்
(i) ஐரோப்பிய சங்கம் (EU)	A - சைப்பிரஸ்
(ii) தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ASEAN)	B - ஜப்பான்
(iii) ஜீ 8 (G 8)	C - உகண்டா
(iv) பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் (SAARC)	D - லாவோஸ்
(v) ஆபிரிக்கச் சங்கம் (AU)	E - ஆப்கானிஸ்தான்

மேலே தரப்பட்டுள்ள சர்வதேச அமைப்புகளின் ஒழுங்குவரிசைக்கு அமைவாக அவற்றுடன் பொருந்தக்கூடிய அங்கத்துவ நாடுகள் சரியாக எடுத்துக் காட்டப்பட்டுள்ள தெரிவு யாது?
(1) A, D, B, E, C (2) A, E, C, B, D (3) C, B, E, A, D
(4) C, E, B, A, D (5) D, A, B, E, C (......)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

6. வணிகங்கள் தொடர்பான கூற்றுக்கள் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன.

கூற்று A : அகச்சூழல் பகுப்பாய்வின் மூலம் வணிகமொன்றின் பலங்களையும் பலவீனங்களையும் இனங்காண முடியும்.

கூற்று B : கைத்தொழில் சூழல் பகுப்பாய்வின் மூலம் வணிகமொன்றின் வாய்ப்புக்களையும் அச்சுறுத்தல்களையும் இனங்காண முடியும்.

மேலே தரப்பட்டுள்ள இரண்டு கூற்றுக்களில்

(1) **A** மாத்திரம் சரியானதாகும்.
(2) **B** மாத்திரம் சரியானதாகும்.
(3) **A, B** ஆகிய இரண்டும் சரியானதாகும்.
(4) **A, B** ஆகிய இரண்டும் பிழையானதாகும்.
(5) **A** சரியானதாகும் அதேவேளை **A** யினூடாக **B** விபரிக்கப்படும். (……)

7. இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கமானது சாதகமாகத் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய வணிகச் சோடியை உள்ளடக்கியுள்ள விடையினை தெரிவுசெய்க.

(1) நிர்மாணம், சுற்றுலா (2) மோட்டார் வாகனங்கள், சுற்றுலா
(3) மோட்டார் வாகனங்கள், தேயிலை (4) நிர்மாணம், தேயிலை
(5) சுற்றுலா, தேயிலை (……)

8. 'நிலைபேறான தன்மை' என்பது

(1) சூழல், பொருளாதார மற்றும் சமூக விசைகள் மீதான குறுங்கால நோக்கு
(2) சூழல், பொருளாதார மற்றும் கலாசார விசைகள் மீதான நீண்டகால நோக்கு
(3) சூழல், அரசியல் மற்றும் சமூக விசைகள் மீதான குறுங்கால நோக்கு
(4) சூழல், பொருளாதார மற்றும் சமூக விசைகள் மீதான நீண்டகால நோக்கு
(5) சூழல், கலாசார மற்றும் அரசியல் விசைகள் மீதான நீண்டகால நோக்கு (……)

9. இலங்கையில் உள்ளூராட்சி அமைப்புக்களினூடாக **வழங்கப்படாத** ஒரு சேவை

(1) கழிவுகளை அகற்றுதலாகும்.
(2) நிதிக் கொள்கைகளின் அமுலாக்கமாகும்.
(3) சூழல் கொள்கைகளின் அமுலாக்கமாகும்.
(4) இறைவரிக் கட்டணங்களை (வரிப்பணங்களை) வசூலித்தலாகும்.
(5) கட்டட நிர்மாண வரைபடங்களுக்கான அனுமதியளித்தலாகும். (……)

10. இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள வரி வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - உற்பத்தி வரி
B - கம்பனி வரி
C - உயர் தனிநபர் வருமான வரி (APIT)
D - பெறுமதி சேர் வரி
E - சமூக பாதுகாப்பு வரி
F - மூலதன ஆதாய வரி
G - பிடித்து வைத்தல் வரி

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் நேர் வரிகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ள தொகுதி யாது?

(1) A, B, D, E (2) A, C, E, F (3) B, C, F, G (4) C, D, E, G (5) C, E, F, G (……)

11. நாணயக்கொள்கை கருவிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - வங்கி வீதம்
B - அறவழியில் தூண்டுதலளித்தல் (Moral suasion)
C - திறந்த சந்தைச் செயற்பாடுகள்
D - எல்லைத் தேவைப்பாடுகள்
E - சட்ட ரீதியான ஒதுக்கு வீதம்
F - மீள் நிதி வசதிகள்

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் அளவுசார் நாணயக்கொள்கை கருவிகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ள தொகுதி யாது?

(1) A, B, C (2) A, C, E (3) B, D, E (4) C, D, E (5) C, E, F (……)

12. நுண், சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களை **வகைப்படுத்தாத** நியதியாவது

(1) ஊழியர்களின் எண்ணிக்கை (2) உற்பத்தி அளவு
(3) ஈடுபடுத்திய மூலதனம் (4) வருடாந்த புரள்வு
(5) இலாப எல்லை (……)

13. தனியுடைமை வணிகம் தொடர்பில் சரியான கூற்றினைத் தெரிவுசெய்க.

(1) பதிவு செய்தல் கட்டாயமானது.
(2) கணக்காய்வு செய்தல் கட்டாயமானது.
(3) வருமான வரி செலுத்துதல் கட்டாயமானது.
(4) உள்ளூராட்சி அமைப்புக்களின் சட்டப் பிரமாணங்களைப் பின்பற்றுதல் கட்டாயமானது.
(5) முகாமையில் குடும்ப அங்கத்தவர்களின் பங்குபற்றல் கட்டாயமானது. (……)

[பக். 3 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

14. உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனி ஒன்றின் பண்பினை எடுத்துக் காட்டும் கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) கம்பனியினால் இலாபங்கள் பகிர்வு செய்யப்படுவதில்லை.
(2) ஆகக் குறைந்த பணிப்பாளர் எண்ணிக்கையை ஒருவராக வரையறுத்தல்.
(3) ஆகக் குறைந்த பங்குதாரர் எண்ணிக்கை இரண்டாக காணப்படுதல்.
(4) பங்குகள் மற்றும் பிணைகளை பகிரங்கமாக வெளியிடும் இயலுமை காணப்படுதல்.
(5) வணிக நோக்கத்தை முன்னிலைப்படுத்தி உருவாக்குதல். (......)

15. கம்பனி ஒன்று தொடர்பிலான சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - கம்பனியின் நோக்கங்கள்
B - பங்குதாரர்களின் உரிமைகள்
C - கம்பனியின் பங்கு மூலதனம்
D - பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி
E - கம்பனியின் முகாமை
மேலே தரப்பட்டுள்ளவற்றுள் இலங்கையின் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்துக்கு அமைவாக அமைப்பு அகவிதியில் உள்ளடங்கும் விடயங்களை மாத்திரம் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) A, B, E (2) A, C, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E (......)

16. இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - அரச கடன் முகாமைத்துவம்
B - நிதிக் கொள்கைகளை அமுலாக்குதல்
C - வெளிநாட்டு நாணயமாற்று முகாமைத்துவம்
D - நிதியியல் உளவறிதல் சேவைகளை வழங்குதல்
E - நிதி முறைமைகளை மேற்பார்வை செய்தல்
F - ஊழியர் சேமலாப நிதியின் பாதுகாவலர்
மேலே தரப்பட்டுள்ளவற்றுள் இலங்கை அரசு சார்பாக மத்திய வங்கியானது நிறைவேற்றும் முகவராண்மைத் தொழிற்பாடுகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) A, B, C, E (2) A, C, D, F (3) B, C, E, F (4) B, D, E, F (5) C, D, E, F (......)

17. காப்புறுதி செய்யக்கூடிய வணிக இடருக்கான உதாரணமொன்றாக அமைவது
(1) நவீனங்களில் (fashion) மாற்றம்
(2) இயந்திரங்களுக்கான பெறுமானத்தேய்வு
(3) வணிக நட்டங்கள்
(4) பணப்பெறுமதியின் ஏற்ற இறக்கங்கள்
(5) கடன்பட்டோரிடமிருந்து பணம் கிடைக்காமல் போதல் (......)

18. 'காரணீகர்' என்பதால் கருதப்படுவது
(1) கொள்வனவாளர்களையும் விற்பனையாளர்களையும் இணைப்பதன் மூலம் அக் கொடுக்கல்வாங்கல்களுக்காக தரகுக் கட்டணத்தைப் பெறுகின்ற நபர்.
(2) முதல்வர் சார்பாக தனது தீர்மானத்தின்படி கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதனூடாக தரகைப் பெறுகின்ற நபர்.
(3) முதல்வர் சார்பாக பொருளை எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ உயர்ந்த விலையொன்றைக் கோரும் கொள்வனவாளருக்கு விற்பனை செய்கின்ற நபர்.
(4) முதல்வர் சார்பாக பொருட்களைக் கொள்வனவு அல்லது விற்பனை செய்கின்றபோது தனது பெயரிலேயே கொடுக்கல்வாங்கலில் ஈடுபடும் நபர்.
(5) முதல்வர் சார்பாக கடனுக்கு பொருளை விற்பனை செய்வதன் மூலம் ஏற்படும் கடனைத் தொடர்புடைய நபரிடமிருந்து வசூலிக்கும் பொறுப்பை ஏற்கும் நபர். (......)

19. கீழே தரப்பட்டுள்ள சர்வதேச வியாபாரத்தில் நுழைவதற்கான வழிகளில் **குறைந்த** இடரைக் கொண்ட வழி யாது?
(1) கூட்டு முயற்சிகள்
(2) ஏற்றுமதிகள்
(3) இணைப்புக்கள்
(4) கையகப்படுத்தல்
(5) வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (FDI) (......)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

20. பின்வரும் அட்டவணையில் சில முகாமைத்துவ எண்ணக்கருக்களும் அவை தொடர்பான விவரங்களும் தரப்பட்டுள்ளன.

எண்ணக்கருக்கள்		விவரங்கள்	
(i)	கட்டளையின் ஓரினத்தன்மை	A -	நிறுவனமொன்றின் அதிகாரம், பணிகள் மற்றும் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதைக் காட்டும் ஒரு வழி
(ii)	பன்முகப்படுத்தல்	B -	நிறுவனமொன்றின் முகாமையின் மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை கட்டளையானது தொடர்ச்சியாக பாய்ந்து செல்லுதல்
(iii)	கட்டுப்பாட்டு விசாலம்	C -	ஊழியர் ஒருவர் ஒரு மேற்பார்வையாளருக்கு மாத்திரம் பொறுப்புக் கூறுதல்
(iv)	நிறுவனக் கட்டமைப்பு	D -	முகாமையாளர் ஒருவருக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்கும் ஊழியர்களின் எண்ணிக்கை
(v)	கட்டளைச் சங்கிலி	E -	தீர்மானம் எடுக்கும் அதிகாரக் கையளித்தலானது நிறுவனத்தின் மேல் மட்ட முகாமையில் இருந்து கீழ் மட்ட முகாமை வரை காணப்படுதல்

மேலே தரப்பட்டுள்ள எண்ணக்கருக்களின் ஒழுங்குவரிசைக்கு அமைவாக அதற்குப் பொருத்தமான விவரத்தினை சரியாக எடுத்துக்காட்டும் தொகுதி யாது?

(1) A, B, E, C, D (2) A, D, E, C, B (3) C, E, A, D, B
(4) C, E, D, A, B (5) E, B, C, D, A (......)

21. முகாமையாளர் ஒருவருக்கு கிடைக்கின்ற வலு மூலங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - சட்ட ரீதியான வலு
B - தண்டனை வழங்கும் வலு
C - வெகுமதியளிக்கும் வலு
D - செல்வாக்குச் செலுத்தும் வலு
E - நிபுணத்துவ வலு

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் பதவி நிலைக்கான வலுக்களை மாத்திரம் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, C, E (3) B, C, D (4) B, D, E (5) C, D, E (......)

22. உற்பத்தி நிறுவனமொன்றின் வருடாந்த மொத்தக் கிரயமும் மொத்த மாறும் கிரயமும் முறையே ரூ 360 000 மற்றும் ரூ 120 000 ஆகும். நிறுவனமானது 6 000 அலகுகளை விற்பனை செய்ததன் மூலம் பெற்றுக்கொண்ட வருடாந்த வருமானம் ரூ 300 000 ஆகும். இலாப - நட்டமற்ற புள்ளியை அடைவதற்கு நிறுவனமானது விற்பனை செய்ய வேண்டிய அலகுகளின் எண்ணிக்கையாவது

(1) 4 000 (2) 8 000 (3) 10 000 (4) 12 000 (5) 20 000 (......)

23. முழுமைப்படைப்பு சந்தைப்படுத்தல் எண்ணக்கருவுக்கு தொடர்பல்லாத கூறாக அமைவது

(1) தொடர்புடைமை சந்தைப்படுத்தல் (2) அகச் சந்தைப்படுத்தல்
(3) செயற்றிறன் சந்தைப்படுத்தல் (4) பண்டக்குறி சந்தைப்படுத்தல்
(5) ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் (......)

24. கீழே தரப்பட்டுள்ள நிதி முகாமைத்துவ தீர்மானங்களுள் நீண்டகால நிதித் தீர்மானம் யாது?

(1) வணிக நவீனமயப்படுத்தல் (2) வணிக பல்வகைப்படுத்தல் (3) பங்கிலாபங்கள்
(4) சரக்கிருப்புக்கள் (5) வங்கி மேலதிகப் பற்றுக்கள் (......)

25. நிதிச் சந்தைக் கருவிகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - திறைசேரி முறிகள்
B - வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன்
C - வணிகத் தாள்கள்
D - கூட்டுரு முறிகள்
E - திறைசேரி உண்டியல்கள்
F - பங்குகள்
G - நாணயக் கடிதம்

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் பணச்சந்தைக்கு உரித்தான கருவிகளை மாத்திரம் கொண்டுள்ள தொகுதியை தெரிவுசெய்க.

(1) A, C, D, F (2) A, D, E, G (3) B, C, E, G (4) B, D, E, F (5) C, D, E, F (......)

26. வருமானச் சேகரிப்புடன் தொடர்புடைய சில கொள்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - உரிமையாண்மை
B - பிரிபடாத் தன்மை
C - வசதி
D - அளவிடக்கூடிய தன்மை
E - நிச்சயத் தன்மை
F - சிக்கனத்தன்மை

மேலே தரப்பட்டுள்ளவற்றுள் வரியிடலுடன் தொடர்புடைய கொள்கைகளை மாத்திரம் கொண்டுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, D, F (2) A, C, E, F (3) B, C, D, E (4) B, D, E, F (5) C, D, E, F (......)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

27. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்கு அமைவாக பணிக்கொடைக் கொடுப்பனவைப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு ஊழியர் ஒருவர் தொழில் வழங்குனரின் கீழ் சேவையாற்றியிருக்க வேண்டிய குறைந்தளவு வருடங்களின் எண்ணிக்கை
(1) 3 (2) 4 (3) 5 (4) 6 (5) 7 (......)

28. கீழே தரப்படுவது தொழில் வழங்குனர்கள் மற்றும் ஊழியர்களினால் பின்பற்றப்படும் சில கைத்தொழில் நடவடிக்கைகள் ஆகும்.
A - சட்டப்படி வேலை செய்தல்
B - மேலதிக நேர வேலையில் ஈடுபடாதிருத்தல்
C - வெளியேறுதல் (Lockout)
D - வேலைகளைத் தவிர்த்தல்.
E - வேலை நிறுத்தத்திற்கு பிரதியீடு செய்தல்
F - பதாகைகளை ஏந்திப் போராட்டம் செய்தல்
G - உற்பத்தி செய்யும் இடத்தை மாற்றுதல்
H - வேலையைக் கைவிட்டுச் சென்றதாகக் கருதுதல்
மேலே தரப்பட்டுள்ளவற்றுள் ஊழியர்களின் கைத்தொழில் நடவடிக்கைகளை தவிர்ப்பதற்காக தொழில் வழங்குனர்களால் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை மாத்திரம் கொண்ட தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) A, D, E, G (2) A, B, C, H (3) B, D, E, F (4) C, D, E, F (5) C, E, G, H (......)

29. 'முறைமை மென்பொருள்' பற்றி மிகவும் சரியாக விபரிக்கும் கூற்றாவது,
(1) கணினி வன்பொருளை செயற்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட நிகழ்ச்சி ஆகும்.
(2) கணினி முறைமையை ஒழுங்கான முறையில் பேணுவதற்காக உதவும் நிகழ்ச்சி ஆகும்.
(3) கணினிப் பயன்பாட்டாளர்களுக்காக விசேடமாக உருவாக்கப்பட்ட நிகழ்ச்சி ஆகும்.
(4) கணினி மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட கருவிகளின் பௌதிக கூறுகள் ஆகும்.
(5) கணினி நிகழ்ச்சிகளை களஞ்சியப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் கருவிகள் ஆகும். (......)

30. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது தரக்கட்டுப்பாட்டு நுட்பங்களையும் அதற்குப் பொருத்தமான விவரணங்களையும் தருகிறது.

நுட்பங்கள்	விவரணங்கள்
(i) தரவட்டங்கள்	A - உற்பத்தி செய்யப்படுகின்ற ஒவ்வொரு தயாரிப்புக்களும் வழுவற்றது என்பதை உறுதி செய்தல்
(ii) பூச்சிய வழு	B - தயாரிப்புக்களின் தரத்தினை உறுதி செய்வதற்காக உற்பத்திச் செயன்முறையினை முறையாகச் செயற்படுத்தல்
(iii) தர உறுதிப்பாடு	C - தயாரிப்புக்கள் மற்றும் அவற்றின் செயன்முறைகளை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் நுட்பங்கள்
(iv) தர நியமங்கள்	D - உற்பத்தியில் காணப்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக சிறிய குழுக்களுடனான கலந்துரையாடல்
(v) சிக்ஸ் சிக்மா (SIX SIGMA)	E - தேசிய அல்லது சர்வதேச நியமங்களுக்கு அமைவாக பொருட்களை உற்பத்தி செய்தல்

மேலே தரப்பட்டுள்ள நுட்பங்களின் ஒழுங்குவரிசைக்கு அமைவாக விவரணங்களைச் சரியாக கொண்டுள்ள தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) A, B, C, E, D (2) B, C, A, D, E (3) B, E, D, A, C
(4) D, A, B, E, C (5) D, C, E, B, A (......)

- **31** தொடக்கம் **40** வரையிலான வினாக்களுக்கு விடையெழுதும்போது **பொருத்தமான சொல் / சொற்களைப்** பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.

31. (அ) வர்த்தகமானது .... மற்றும் .... ஆகிய இரண்டு கூறுகளை கொண்டிருக்கின்றது.

(ஆ) முகாமையாளர்கள் .... சூழல் விசையாகவும் வழங்குனர்கள் .... சூழல் விசையாகவும் காணப்படுவர்.

32. (அ) ஆபிரகாம் மஸ்லோவின் தேவைசீர் கோட்பாட்டிற்கு அமைவாக உணவு என்பது .... தேவையாகவும் தனிநபர்களின் சமூக அங்கீகாரம் .... தேவையாகவும் காணப்படும்.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(ஆ) நாடொன்று கடன்தீர்க்க முடியாமையில் இருந்து தாக்குப்பிடிக்கும் இயலுமை .... உறுதித்தன்மை என அழைக்கப்படுவதுடன் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான இயலுமை .... உறுதித்தன்மை எனவும் அழைக்கப்படும்.

33. (அ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பங்குகளின் விற்பனை தொடர்பிலானது .... நிறுவனங்களாகும் அதேவேளை ஆரம்பப் பொது வழங்கலின்போது கொள்வனவு செய்யப்படாத பங்குகளை கொள்வனவு செய்வது சம்பந்தமானது .... நிறுவனங்கள் ஆகும்.

(ஆ) சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வாக .... முயற்சியாண்மை செயற்படும் அதேவேளை, ... முயற்சியாண்மை நிறுவனங்களின் மாற்றங்களை இனங்கண்டு அவை தொடர்பில் செயற்படும்.

34. (அ) ஊழியர் .... நிதியத்துக்கு தொழில் வழங்குனர் மற்றும் ஊழியர் ஆகிய இருசாராரும் பங்களிப்புச் செய்யும் அதேவேளை ஊழியர் .... நிதியத்துக்கு தொழில் வழங்குனர் மாத்திரம் பங்களிப்பு செய்வார்.

(ஆ) அறிவித்தல் வழங்காமல் வேலைக்கு சமூகமளிக்காதிருத்தல் ஊழியர் .... என அழைக்கப்படுவதுடன் அறிவித்தல் வழங்காமல் நீண்ட காலமாக வேலைக்கு சமூகமளிக்காதிருத்தல் .... என அழைக்கப்படும்.

35. (அ) தூண்டுதலளிப்பதன் மூலம் பொருட்களை விற்பனை செய்தல் .... எண்ணக்கரு என அழைக்கப்படுவதுடன் வாடிக்கையாளர் வேண்டுகோளுக்கு இணங்க பெறுமதியை உருவாக்குவதனூடாக பொருட்களை விற்பனை செய்தல் .... எண்ணக்கரு என அழைக்கப்படும்.

(ஆ) இலங்கையில் காணப்படும் வணிகங்கள் தமது பண்டக்குறியை 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க .... சொத்துச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்ய முடியும் என்பதுடன் அது .... குறியாகவும் அமையும்.

36. (அ) நிதிச் சந்தையானது .... மற்றும் .... சந்தைகளைக் கொண்டிருக்கும்.

(ஆ) பூகோள ரீதியில் வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கொடுப்பனவுச் சேவையினை நடைமுறைப்படுத்தும் தொடர்பாடல் வலைப்பின்னலின் சுருக்கக் குறியீடானது .... என அழைக்கப்படுவதுடன், இலங்கையினுள் வங்கிகளுக்கு இடையிலான பணக் கொடுக்கல்வாங்கல்களை நடைமுறைப்படுத்தும் நிகழ்நிலை முறைமையின் சுருக்கக் குறியீடானது .... என அழைக்கப்படுகின்றது.

37. (அ) வணிகத்தின் குறுங்கால கடன் தீர்க்கும் ஆற்றலை .... விகிதங்கள் ஊடாக இனங்காண முடிகின்ற அதேவேளை .... விகிதத்தின் மூலம் சொத்துக்கள் மீதான முதலீடுகள் மற்றும் அவற்றுக்கான திரும்பல்களுக்கிடையிலான தொடர்பை இனங்காண முடியும்.

(ஆ) வணிகமொன்றின் எதிர்கால செயற்பாட்டு நடவடிக்கைகளை பேணுவதற்குத் தேவையான பணத்தை மதிப்பிடுவதற்கு .... பாதீடு பயன்படுத்தப்படுவதுடன் வணிகமொன்றின் நீண்டகால சாத்தியமான முதலீடுகளை திட்டமிடுவதற்கு .... பாதீடு பயன்படுத்தப்படுகிறது.

38. (அ) ஊழியர்களது எண்ணங்களையும் கருத்திற் கொண்டு தொழிற்படும் தலைவர் கொண்டிருப்பது .... தலைமைத்துவப் பாங்காக இருக்கும் அதேவேளை அவ்வாறில்லாது தமது எண்ணத்திற்கு அமைவாக தொழிற்படும் தலைவர் கொண்டிருப்பது .... தலைமைத்துவப் பாங்கு ஆகும்.

(ஆ) நிறுவனமொன்றின் உற்பத்திச் செயன்முறைக்குத் தேவையான உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்வது .... அமையவியல்/ஏற்பாட்டியல் (Logistics) தொழிற்பாடு எனவும் வெளியீடுகளைச் சந்தைகளுக்கு வழங்குவது .... அமையவியல்/ஏற்பாட்டியல் தொழிற்பாடு எனவும் அழைக்கப்படும்.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

39. (அ) இறப்பர் கையுறை தயாரிக்கும் நிறுவனமானது இறப்பரை உற்பத்தி செய்யும் கம்பனி ஒன்றினை கையகப்படுத்துவது .... ஒருங்கிணைப்புக்கு உதாரணமாகவும் அக் கையுறை தயாரிக்கும் நிறுவனமானது கையுறைகளை சந்தைப்படுத்தும் கம்பனி ஒன்றினை கையகப்படுத்தப்படுவது .... ஒருங்கிணைப்புக்கு உதாரணமாகவும் காணப்படும்.

(ஆ) களஞ்சியப்படுத்தல் என்பது சரக்கிருப்புக்களை கொள்வனவு செய்யும் அல்லது உற்பத்தி செய்யும் நேரத்தில் இருந்து அவை பயன்படுத்தப்படும் வரை அல்லது விற்பனை செய்யப்படும் வரை .... மற்றும் .... செயன்முறை ஆகும்.

40. (அ) அரச திணைக்களங்களின் நிர்வாகமானது பெரும்பாலும் .... கோவைக்கு அமைவாகக் காணப்படுவதுடன் அவற்றின் நிதி நிர்வாகமானது .... பிரமாணங்களுக்கு அமைவாகக் காணப்படுகின்றது.

(ஆ) தொடர்பாடல் செயற்பாட்டின் போது அனுப்புபவரது எண்ணத்தினைக் கிரகித்துக்கொள்ளக்கூடிய வகையில் மாற்றம் செய்வது .... எனவும் தகவலை பெற்றுக்கொள்பவரினால் அது விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் மாற்றம் செய்வது .... எனவும் அழைக்கப்படும்.

- **41** தொடக்கம் **50** வரையான வினாக்களுக்குப் **பொருத்தமான விடை** எழுதுக.

41. வாடிக்கையாளர் ஒருவரின் பொறுப்புக்கள் **நான்கினைத்** தருக.

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

42. பொறுப்புக் காப்புறுதியின் கீழ் பெற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதி ஒப்பந்தங்கள் **நான்கினைப்** பெயரிடுக.

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

43. போக்குவரத்து முறைமையொன்றின் கூறுகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

44. திணைக்களப்படுத்தலுக்காக பயன்படுத்தக்கூடிய அடிப்படைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

45. உற்பத்திப்பொருள் வாழ்க்கை வட்ட எண்ணக்கருவின் எடுகோள்கள் **நான்கினைத்** தருக.

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

46. முகாமைசார் பதவிநிலை ஒன்றிற்கு மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரியினை தெரிவுசெய்வதற்கு பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறைகள் **நான்கினைப்** பெயரிடுக.

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

47. கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **A, B, C, D** என்பனவற்றின் ஒவ்வொரு உற்பத்தி முறையினையும் பெயரிடுக.



A - ....

B - ....

C - ....

D - ....

48. வணிகத் திட்டமொன்றினைத் தயாரிக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் **நான்கினை** எழுதுக.

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

49. முகிற் கணினி (Cloud Computing) தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தும் ஒரு நிறுவனம் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(1) ....

(2) ....

(3) ....

(4) ....

50. கீழே தரப்பட்டுள்ள தொழில்நுட்பங்கள் வணிகரொருவரினால் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றினைக் குறிப்பிடுக.

(1) செயற்கை நுண்ணறிவு (AI): ....

(2) விரைவு துலங்கல் குறியீடு (QR Code): ....

(3) பூகோள இடநிலை முறைமை (GPS): ....

(4) கணினி உதவியுடனான வடிவமைப்பு (CAD): ....

❊ ❊ ❊

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

AL/2022(2023)/32/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ව්‍යාපාර අධ්‍යයනය II
வணிகக் கல்வி II
Business Studies II

32 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

※ ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக் குறைந்தது **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி I

1. 'யுதேஷ்' கம்பனியானது உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி பாதணிகளைத் தயாரித்து அவற்றை உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் விற்பனை செய்கிறது. தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக இந்நிறுவனமானது பல்வேறு இடர்களுக்கு முகங்கொடுத்து நிற்கின்றது. அதேபோல், உற்பத்தியை இடைவிடாது தொடர்வதற்கு மின்சாரம் மற்றும் எரிபொருள் நெருக்கடியும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், பாதணிகளைத் தயாரிப்பதன் மூலம் ஏற்படும் கழிவுகளை அகற்றுவதிலும் அவற்றை முகாமை செய்வதிலும் யுதேஷ் கம்பனியானது பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறது.

(i) (அ) வணிகமொன்றின் 'இடர்' என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ஆ) யுதேஷ் கம்பனி எதிர்நோக்கும் இடர்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) அரசாங்கத்தின் முடிவுற்ற பாதணிகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடானது யுதேஷ் கம்பனியில் செலுத்தக்கூடிய தாக்கத்தைச் சுருக்கமாக விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) முடிவுற்ற பாதணிகள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் பிரதிகூலங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(iii) (அ) மின்சார நெருக்கடி தொடர்பிலான கிரய முகாமைத்துவத்தினை மேற்கொள்வதற்காக யுதேஷ் கம்பனியானது கடைப்பிடிக்கக்கூடிய முறைகள் **இரண்டினைப்** பிரேரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) இக் கம்பனியானது கழிவுகளை முகாமை செய்வதற்குக் கடைப்பிடிக்கக்கூடிய வழிமுறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையுடன் தொடர்புடைய பேரினச் சூழல் போக்குகள் **இரண்டினை** இனங்காண்பதுடன் அவை எவ்வாறு இந்நிறுவனத்தில் தாக்கம் செலுத்தும் என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) யுதேஷ் கம்பனியின் முகாமையானது எதிர்காலத்தில் பாதணி உற்பத்தியைத் தொடராதிருப்பதற்குத் தீர்மானிக்குமாயின், இதனூடாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2. "அங்கீகார வணிகம் என்பது உலகமெங்கும் காணப்படும் ஒரு வணிக முறை ஆகும்."

(i) (அ) இவ்வணிக முறையின் மூலம் அங்கீகாரம் வழங்குபவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இவ்வணிக முறையின் மூலம் அங்கீகாரம் பெறுப்வர் முகங்கொடுக்கும் பிரதிகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) சட்டம் மற்றும் ஒழுக்கம் என்பவற்றுக்கிடையே காணப்படும் வித்தியாசங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) நிலைபேறான அபிவிருத்தியின் அடிப்படை மூலங்கள் **இரண்டினை** அவற்றுக்கான உதாரணங்களுடன் சுருக்கமாக விவரிக்குக. (02 புள்ளிகள்)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

[பக். 2 ஐப் பார்க்க

(iii) (அ) 1890 ஆம் ஆண்டின் பங்குடைமைக் கட்டளைச் சட்டத்திற்கு மேலதிகமாக இலங்கையின் பங்குடைமை வணிகத்தில் தாக்கம் செலுத்தும் வேறு சட்டங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) கூட்டுறவு வணிகத் துறையில் காணப்படக்கூடிய குணாம்சங்கள் **நான்கினைத்** தருக. (02 புள்ளிகள்)

(iv) (அ) வரையறுத்த பொதுக் கம்பனிகளின் அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் 2007 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்திற்கு அமைவாக தனியார் மற்றும் பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளின் பெயர்களில் உள்ளடக்கப்பட வேண்டிய கட்டாயத் தேவைப்பாட்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) 'பொதுத்துறை நிறுவனங்களின் மீள்கட்டமைப்பு' என்பதால் கருதப்படுவது யாது என்பதனை வரையறுப்பதுடன் அதன்மூலம் அரசாங்கம் அடைந்துகொள்ள எதிர்பார்க்கும் நோக்கங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3. (i) (அ) காசோலையில் குறுக்குக் கோடிடக்கூடிய **நான்கு** தரப்பினரைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) காசோலையில் 'கைமாற்றத்தகாதது' என குறுக்குக் கோடிடுவதனால் ஏற்படக்கூடிய சட்டத் தாக்கத்தைச் சுருக்கமாக விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) கணக்கு வைத்திருக்கும் ஒருவர் தன்னியக்க ரெல்லர் இயந்திரமொன்றின் (ATM) மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதாவது **ஒன்றினை** மாத்திரம் சுருக்கமாக விவரிக்குக.
(1) பாரிய தரவு (big data) (2) இலத்திரனியல் பணம் (e-money) (02 புள்ளிகள்)

(iii) (அ) முயற்சியாண்மையின் அபிவிருத்திக்காக இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிதிசாரா சேவைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) "ஆக்கத்திறனானது முயற்சியாளர் ஒருவரின் அடிப்படைக் குணாம்சம்." இக்குணாம்சத்தின் முக்கியத்துவத்தினை உதாரணத்துடன் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(iv) "முயற்சியாண்மையானது நாடொன்றின் அபிவிருத்தியின் ஜீவநாடியாக அங்கீகரிக்கப்படுகின்றது." இவ்வங்கீகாரத்துக்கான காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அமைப்புக்கள் தற்போது முகங்கொடுக்கும் சவால்கள் **நான்கினைச்** சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4. (i) (அ) ஆயுட் காப்புறுதிக்கும் சுகாதாரக் காப்புறுதிக்கும் இடையிலான வேறுபாடுகள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) வாடகைக் குடியிருப்பாளர் ஒருவர் அவ்வீட்டினைக் காப்புறுதி செய்ய முடியுமா என்பதனைக் குறிப்பிடுவதுடன், உமது விடைக்கு அடிப்படையான காப்புறுதித் தத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) உலக வியாபார அமைப்பின் (WTO) தொழிற்பாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை மேம்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கக்கூடிய தந்திரோபாயங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) கீழே தரப்பட்டுள்ள அமையவியல் அல்லது ஏற்பாட்டியல் (logistics) முறைகளில் இருந்து **ஒன்றினை** உதாரணத்துடன் விளக்குக.
(1) நேர்மாற்று ஏற்பாட்டியல் (reverse logistics)
(2) மூன்றாம் தரப்பு ஏற்பாட்டியல் (3PL) (02 புள்ளிகள்)

(ஆ) களஞ்சியப்படுத்தலில் பொருத்தமான பொதியிடல் மற்றும் உபகரணங்களின் பாவனையினால் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) இலங்கையின் போக்குவரத்துத் துறையில் காணப்படும் நெருக்கடி நிலையானது வணிகர் மற்றும் வாடிக்கையாளர்களில் தாக்கம் செலுத்தும் வழிகள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) வணிகர் ஒருவர் சமூக ஊடகங்களின் ஊடாகத் தொடர்பாடலை மேற்கொள்வதற்குச் சார்பாகவும் எதிராகவும் காரணங்கள் **இரண்டு** வீதம் விவரிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி II

5. நஸ்ரின் புடவையகத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான ஹனீபா வணிகத்தின் வளர்ச்சிக்காக ஆக்கத்திறனுடைய செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்தும் இடர்களைப் பொறுப்பேற்பவர் ஆவார். அத்துடன், இவர் ஊழியர்களுடன் பயனுறுதியான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதுடன், கிடைக்கின்ற சகல சந்தர்ப்பங்களிலும் ஊழியர்களின் நிகழ்வுகளிலும் நிறுவனம் சார்பாகக் கலந்து கொள்வார். மேலும் நிறுவனத்தின் உள்ளக மற்றும் வெளியக தரப்பினருடன் சிறந்த உறவினை கட்டியெழுப்புவார்.

[பக். 3 ஐப் பார்க்க

0000859

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(i) (அ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் இனங்காணக்கூடிய முகாமையாளர் ஒருவருக்குரிய பிரதான முகாமைத்துவ வகிபாகங்கள் **இரண்டு** யாவை? (02 புள்ளிகள்)

(ஆ) மேலே (அ) வில் இனங்காணப்பட்ட ஒவ்வொரு பிரதான வகிபாகத்திற்கும் அமைவாக சம்பவக் கற்கையில் உள்ளடங்கியுள்ள உப - வகிபாகங்கள் **இரண்டு** வீதம் தருக. (02 புள்ளிகள்)

(ii) (அ) ஹனீபாவிடம் காணப்பட வேண்டிய மிக்வும் முக்கியமான முகாமைத்துவத் திறனைப் பெயரிட்டு உமது விடைக்கான காரணங்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) ஹனீபா தமது நிறுவனத்துக்காக இலட்சியநோக்குக் கூற்றை விருத்தி செய்ய எண்ணுவாராயின் அதனுள் உள்ளடக்கப்பட வேண்டிய கூறுகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) "ஹனீபா ஊழியர் நோக்கிய தலைவராக ஊழியர்கள் மத்தியில் பிரபல்யமானவர்."

(அ) 'ஊழியர் நோக்கிய தலைமைத்துவப் பாங்கு' என்பதை வரைவிலக்கணப்படுத்துவதுடன் அதன் குணாம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) ஹனீபா தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தினைப் பன்முகப்படுத்துவதற்கு எண்ணுவாராயின், அதனூடாக வணிகமானது பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைத்** தருக. (02 புள்ளிகள்)

(iv) கீழே தரப்படுவது 'நஸ்ரின் புடவையகத்தின்' உள்ளீடு மற்றும் வெளியீடு தொடர்பான தரவுகள் சிலவாகும்.

- மூலப்பொருட்கள் - 5 000 அலகுகள்
- ஊழியம் - 2 500 மணித்தியாலங்கள்
- இயந்திரம் - 4 000 மணித்தியாலங்கள்
- சக்திக்கான கிரயம் - ரூ 150 000
- ஊழியக் கிரயம் - மணித்தியாலத்திற்கு ரூ 100
- இயந்திரக் கிரயம் - மணித்தியாலத்திற்கு ரூ 25
- மூலப்பொருள் கிரயம் - அலகிற்கு ரூ 10
- மொத்த வெளியீடு - 300 000 அலகுகள்

(அ) பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(1) ஊழிய உற்பத்தித்திறன் ($\frac{1}{2}$ புள்ளி)

(2) இயந்திர உற்பத்தித்திறன் ($\frac{1}{2}$ புள்ளி)

(3) மொத்த உற்பத்தித்திறன் (01 புள்ளி)

(ஆ) இயந்திர உற்பத்தித்திறனை விருத்தி செய்து கொள்வதற்காக நிறுவனமானது மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) ஹனீபாவின் வணிகத்தினை பயனுறுதி வாய்ந்த விதத்தில் செயற்படுத்துவதற்கு கட்டுப்பாட்டுச் செயன்முறையில் உள்ளடக்கவேண்டிய படிமுறைகளைப் பெயரிட்டு அவற்றினைச் சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

6. 'ரம்யா' நிறுவனமானது தரத்தில் உயர்வான விசுக்கோத்துக்களை தயாரிப்பதுடன் தொடர்புடையதாகும். இந் நிறுவனத்துக்கு புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமையாளரானவர் சந்தைத் துண்டமாக்கல் மற்றும் விற்பனை மேம்படுத்தலின் அவசியத்தினை மேல்மட்ட முகாமையின் கவனத்திற்கு கொண்டு வந்தார். மேலும், இத்தயாரிப்பு தொடர்பில் பொருத்தமான பொதியிடலின் அவசியத் தன்மையும் அவரால் சுட்டிக்காட்டப்பட்டது.

(i) (அ) பயனுறுதியான சந்தைத் துண்டமாக்கல் கொண்டிருக்க வேண்டிய தேவைப்பாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) சந்தைத் துண்டமாக்கலினூடாக வணிகமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினை** உதாரணங்களுடன் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) விசுக்கோத்துக்கான பொதியிடலின் உருவாக்கத்தில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய காரணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) விசுக்கோத்து தொடர்பில் எதிர் - சந்தைப்படுத்தல் (de-marketing) காணப்படுமாயின், அதனை வெற்றிகொள்வதற்கு சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஒருவரால் மேற்கொள்ளக்கூடிய தந்திரோபாயங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) உற்பத்திப்பொருள் வகைப்படுத்தலுக்கு அமைவாக, விசுக்கோத்து எந்தப் பொருள் வகையினுள் அடங்குகின்றது எனக் குறிப்பிட்டு, அதற்கு மிகப் பொருத்தமான விநியோகத் தந்திரோபாயத்தினையும் மற்றும் மேம்படுத்தல் தந்திரோபாயத்தினையும் காரணங்களுடன் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் முதலீட்டாளர் ஒருவருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(v) இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் கொழும்பு பங்குச் சந்தை முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் **நான்கினை** எழுதுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

7. (i) (அ) 'மூலதனப் பாதிடலை' சுருக்கமாக விவரிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) "வணிகமொன்றுக்கான நிதி மூலங்களில் வெளிவாரி நிதி மூலங்களைக் காட்டிலும் உள்வாரி நிதி மூலங்கள் அனுகூலமானவையாகும்." இக்கூற்றுடன் நீர் இணங்குகின்றீரா? உமது விடையை நியாயப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ii) (அ) கொடுப்பனவு முகாமைத்துவம் வணிகமொன்றுக்கு முக்கியமாவதற்கான காரணங்கள் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) ஊழியர் ஒருவர் தவறான நடத்தையில் ஈடுபடுவாராயின் தொழில் வழங்குனரால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) (அ) மனித வளத்தில் காணப்படும் விசேட குணாம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) 'ஊழியர் தகுதிகாண் காலம்' என்பதனை வரையறை செய்து, அதனால் தொழில் வழங்குனர் மற்றும் ஊழியர் ஆகிய இரு சாராருக்கும் கிடைக்கக்கூடிய அனுகூலம் ஒன்று வீதம் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) (அ) 'ஒவ்வொரு வேலையும் மூன்று பிரதான கூறுகளைக் கொண்டுள்ளது.'

(1) அப்பிரதான கூறுகள் **மூன்றினையும்** பெயரிடுக. (01 புள்ளி)

(2) நீங்கள் இனங்கண்ட பிரதான கூறுகளுக்கிடையிலான தொடர்பினைச் சுருக்கமாக விவரிக்குக. (01 புள்ளி)

(ஆ) மனித வளத் தேவையை எதிர்வுகூறுவதில் கருத்திற்கொள்ள வேண்டிய உள்ளகக் காரணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) (அ) நியாயமான காரணம் எதுவுமின்றி ஊழியர் ஒருவர் சேவையில் இருந்து நீக்கப்பட்டாரென ஊழியர் நியாய சபையினால் தீர்மானிக்கப்படின் அந்த ஊழியர் பெற்றுக்கொள்ளக்கூடிய நிவாரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) நிறுவனமொன்றினால் நியமங்களுக்கு அமைவாக தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு (OHS) முறைகள் பின்பற்றப்படாதவிடத்து நிறுவனத்துக்கு ஏற்படக்கூடிய எதிர்மறையான விளைவுகள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

8. (i) (அ) "தகவல்களை வெவ்வேறான நியதிகளுக்கு அமைவாக வகைப்படுத்த முடியும்." தன்மைக்கு அமைவாக தகவல்களின் வகைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) தகவல் முறைமையொன்றின் தொழிற்பாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) (அ) முறைமை மென்பொருளுக்கும் இயக்க மென்பொருளுக்கும் இடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) அழகன் கம்பனியானது தனது ஊழியர் தரநிலைக்குப் பொருத்தமான தகவல் முறைமைகளைக் கருத்திற்கொள்ள உத்தேசிக்கின்றது. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஊழியர் தரநிலைக்கும் பொருத்தமான தகவல் முறைமையினைப் பெயரிடுக.

(1) மேல்மட்ட முகாமை

(2) நடுத்தர மட்ட முகாமை

(3) தொழினுட்ப உத்தியோகத்தர்கள்

(4) எழுதுவினைஞர்கள் (02 புள்ளிகள்)

(iii) (அ) வணிக நடவடிக்கைகளுக்காக இணையத்தைப் பயன்படுத்துவதனால் வணிகமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) "மின்னஞ்சல் (email) முகவரி ஒன்று உப-பாகங்கள் பலவற்றை கொண்டுள்ளது." கீழே தரப்பட்ட மின்னஞ்சல் முகவரியின் ***A*** மற்றும் ***B*** ஆகிய இடங்களுக்குப் பொருத்தமான சொற்களை எழுதுக. (02 புள்ளிகள்)



(iv) (அ) வணிகத் திட்டமொன்றைத் தயாரிப்பதன் மூலம் வணிகர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகத் திட்டம் ஒன்றில் உள்ளடங்கியுள்ள நிறைவேற்றுச் சுருக்கம் ஒன்றினைத் தயாரிப்பதன் பிரதான நோக்கத்தினைச் சுருக்கமாக விவரிக்குக. (02 புள்ளிகள்)

(v) (அ) வணிகத் திட்டமொன்றில் உள்ளடங்கியுள்ள நிதித் திட்டம் வணிகர் ஒருவருக்கு முக்கியத்துவமாகும் சந்தர்ப்பங்கள் **நான்கினைத்** தருக. (02 புள்ளிகள்)

(ஆ) வணிகத்திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்போது சூழல் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான அவசியத்தினை சுருக்கமாக விளக்குக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

***